மத்தியப் பல்கலைக் கழகம்.

*4056— திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துமாறு மைய அரசைக் கோரும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் மாநில சார்பில் மத்திய பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் ஆந்திரப் பிரதேசத்திலும் பாண்டிச்சேரியிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போல தமிழ்நாட்டிலும் ஒரு மத்தியப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தினால் நம்முடைய தமிழ்நாட்டில் வந்து இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கும், தேசிய ஒருமைப்பாடு வளருவதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகையால் மாநில அரசு மத்திய அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகங்கள் போதுமான அளவுக்கு இல்லை என்ற நிலையோ அல்லது மத்தியப் பல்கலைக் கழகம் ஏற்பட்டால் தான் இந்தக் குறை தீரும் என்ற கருத்தோ அரசுக்கு இருக்குமானால் வலியுறுத்தலாம். தமிழ்நாட்டில் போதுமான அளவுக்குப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆகையால் அடிப்படையான கல்வி வளர்ச்சிக்கு மத்திய அரசு தரக்கூடிய உதவிகளைப் பெறுவதற்கு வலியுறுத்துவதிலே இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் வருமானால், ''ஸ்டான்டர்ட் ஆஃப் எஜுகேஷன்'' அதிகமாக இருக்கும். ''ஆல் இந்தியா'' அளவில் ''காம்படிஷனுக்கு'' செல்லும் மாணவர்களில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக இருக்கும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்களின் தேர்வு அதிகமாக இருக்கும். மற்ற மாநில மாணவர்களோடு பழகவும் இதனால்

1990 மார்ச் 31]

வாய்ப்பு ஏற்படும் ஆகையால் ஹைதராபாத், பாண்டிச்சேரியில் இருக்கின்ற பல்கலைக் கழகத்தைப்போல தமிழ்நாட்டிலும் நிறுவ தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டால் ஐ.ஏ.எஸ்., ஐ.பி. எஸ். போன்ற தேர்வுகளில் அதிகம் பேர் வெற்றிபெறுவார்கள் என்று பேசுவதோ, கருதுவதோ அவ்வளவு ஆதாரத்தோடு கூடியது அல்ல. ஏதோ மத்தியப் பல்கலைக் கழகம் என்று சொல்லுகிற காரணத்தால் மாநிலப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் தரம் குறைந்தவை என்று வேறுபடுத்துவது நியாயம் அல்ல. அவை யவை, கல்வித் துறையிலே எந்தெந்த வகையிலே சிறப்பாகப் பணியாற்ற முடியுமோ அந்த அளவுக்கு அவற்றிற்குள்ள வசதிக்கு ஏற்ப ஆற்றிக் கொண்டிருக்கின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகத்தை ஒட்டிய ஒரு கேள்வி. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிற ஐ.ஏ.எஸ். பதிவாளரைப் போன்றே எதிர் காலத்தில் மற்ற பல்கலைக் கழகங்களிலும் பதிவாளர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது பழைய மரபுப்படி பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பதிவாளராக நியமிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. சென்னைப் பல் கலைக் கழகத்தில் ஏற்பட்ட குறைபாடுகள், விதிமுறைகளை மீறிய சில தவறுகள், செயல் முறைகள் இவை பற்றி ஆய்வு நடத்தக் கூடிய நிலையிலே அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பதிவாளராக இருக் கிறார். அதுவே அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல.

புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதி.

*2556—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989-ல் தமிழகத்தில் புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதித்துள்ள தொழில்கள் எத்தனை ?

(ஆ) அவை எந்தவிதமான தொழில்கள் ?

(இ) அவற்றில் தனியார் துறை, பொதுத்துறை தொழில்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,